# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 29

இதழ் : 9

வைகாசி

யாழ்ப்பாணம்

1974

## இந்த இதழில்....

○ ஆசிரியர் தலையங்கம்

○ இலங்கைக் கூட்டுறவு இயக்கம் : தோற்றுவாயும் வளர்ச்சியும்

○ இன்றைய இலங்கைப் பொருளாதாரத்தில் கூட்டுறவின் பங்கு

○ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

○ ஆறு ஐக்கியத் தலைவர்கள்

○ இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை கூட்டுறவு மூலம் எவ்வாறு தீர்க்கலாம்

○ தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்க முன்னேற்றப்

# ஐக்கியதீபம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "

மலர் 29 | யாழ்ப்பாணம், வைகாசி 1974 | இதழ் 9


# உலக உணவுக் கையிருப்புக் குறைகின்றது

இன்று இலங்கையிலே உணவுப் பிரச்சினை வயிற்றுப் பிரச்சினை மட்டுமன்று, கட்சி அரசியல் பிரச்சினையாகவும் மாறிவிட்டது. இது மிகவும் வருந்தத்தக்கது. ஏனெனில் நாம் இப்பிரச்சினையை ஒற்றுமைப்பட்டு நோக்காதவிடத்து அழிவேற்படுவது திண்ணம்; கவிஞன் பாடியது போன்று " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு "

இங்குள்ள சிலர் ஏற்க மறுத்தாலும் உண்மையாகவே உலகில் மிகப்பயங்கரமான உணவு நெருக்கடி உருவாகியுள்ளது. நாளுக்கு நாள் கையிருப்புக் குறைந்து கொண்டே போகின்றது; இப்போக்கு நீடிக்குமேயானால் இவ்வாண்டின் நடுப்பகுதியில் மூன்றே மூன்று வாரங்களுக்கு மட்டுமே போதுமான கையிருப்பு எஞ்சியிருக்கக் கூடிய மிகப்பயங்கரமான கட்டம் உண்டாகும் என ஐ. நா. உணவுவிவசாய நிறுவனத் தலைவர் கலாநிதி போர்மா அண்மையில் எச்சரித்துள்ளார்;

இந்த எச்சரிக்கைக்கு நாம் எல்லோரும், குறிப்பாக கூட்டுறவாளர்கள் செவிசாய்த்து நிலைமையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். உணவைப் பொறுத்தவரை இனிமேலும் நாம் பிச்சா பாத்திரத்தை நீட்டிக் கொண்டிருக்க முடியாது. எல்லா நாடுகளிலுமே இன்று உணவுப் பிரச்சினை ஓரளவுக்காயினும் தலைதூக்கி இருக்கின்றது. இந்நிலையிலே

தன்னையே தனக்குதவி என்ற அடிப்படையில் நாம் இயங்க வேண்டும். நெற்பயிர்ச் செய்கையிலும், உபஉணவுற்பத்தியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய கவனம் செலுத்துவது இன்றியமையாதது. எடுத்துக்காட்டாக இறுங்கு போன்ற உப உணவுப் பயிர்கள் மிக வெற்றிகரமாக இங்கு பயிரிடப்பட்டுள்ளன. இத்தகைய பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவிப்பதற்கு சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

கலாநிதி போர்மா உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கான அனைத்துலக முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு எல்லா நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் இந்த நோக்கத்திற்காக வளர்ச்சியுற்றுவரும் ஏழை நாடுகளுக்கு இயன்ற எல்லா உதவிகளை அளிக்கும்படியும் அவர் கோரியுள்ளார். இவரின் அறைகூவலை எதிரொலிக்கும் வகையில் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் சிறப்புக் கூட்டத்தில் மிக முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின்படி ஒரு புதிய உலக நாணய அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. வளர்ச்சி பெற்ற மேற்கத்திய பணக்கார நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரிக்காதது வியப்பன்று. ஏனெனில் இன்றைய உலக நாணய அமைப்பு அவர்களுக்குத்தானே சாதகமாக இருக்கின்றது. ஆகவே, கலாநிதி போர்மா தொட்டுக்காட்டியுள்ள பிரச்சினையை அனைத்துலக நிறுவனங்கள் தீர்த்துக்கட்டும் என எதிர்பார்ப்பது அவ்வளவு விவேகமானதல்ல. ஆனால் கூட்டுறவாளராகிய நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் எமது இயக்கம் அனைத்துலகையும் தழுவியது. எமக்கென்று ஒரு நிறுவனம் உண்டு- அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம். இதன்மூலம் கலாநிதி போர்மா சுட்டிய பிரச்சினையை நாம் தீர்க்க முனைவோமாக.

— o —

# எமது அனுதாபம்

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் பரந்தன் மாவட்டக்குழுவின் உப தலைவராகிய திரு. A. C. பொன்னம்பலம் அண்மையில் காலமானார். கூட்டுறவு இயக்கத்தில் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருந்த அன்னாரின் பிரிவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கின்றோம்.

—ஆ-ர்

## அஞ்சல் மூலமமைந்த பயிற்சி நெறி

# கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம்

## ( கனிஷ்ட பிரிவு )

பல்வேறு கூட்டுறவுக் கல்வி நிலையங்களினால் நடாத்தப்பட்டு வந்த கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (கனிஷ்ட தரப்) பயிற்சி நெறிக்குப் பதிலாக அஞ்சல் மூலமமைந்த பயிற்சி நெறி 1973-ம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வருகின்றது. இதன் அடுத்த பயிற்சி 1974-ம் ஆண்டு ஆடி மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இப் பயிற்சி நெறி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படும்.

தகமைகள் :-

கூட்டுறவுச் சங்கமொன்றின் பணியாளர் எவரேனும் இப் பயிற்சி நெறியினைப் பயிலலாம்.

பதிவு செய்தல்:-

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் கொழும்பு-3, காலி வீதியில் 455-ம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா தேசீயக் கூட்டுறவுச் சபையில் தம்மைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

பதிவு செய்வதற்காய கட்டணம்:-

பயிற்சி நெறிக்குப் பதிவு செய்வதற்காய கட்டணம் ரூபா 5/- ஆகும்.

பாடங்கள்:-

கனிஷ்ட தரப் பயிற்சி நெறி 3 பாடங்களைக் கொண்டது. அவையாவன: கூட்டுறவு, கணக்குப் பதிவியல், விற்பனையியல். பயிற்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள பரீட்சார்த்தி விரும்புவாராயின் தடவையொன்றுக்கு ஒரு பாடமாக எடுக்கலாம்.

பயிற்சி நெறிக்கான கட்டணங்கள்:-

| | |
|---|---|
| கூட்டுறவு | — ரூபா 15-00 |
| விற்பனையியல் | — ரூபா 15-00 |
| கணக்குப்பதிவியல் | — ரூபா 20-00 |

விண்ணப்பங்கள்:-

இப் பயிற்சி நெறிக்குப் பதிவு செய்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, முத்திரையொட்டி, முகவரி எழுதப்பட்ட தபாலுறைகளை "பொறுப்பதிகாரி, அஞ்சல் மூலமமைந்த பயிற்சி நெறித் தொகுதி, ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை, 455, காலி விதி, கொழும்பு-3" என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும், விண்ணப்பதாரி சேவையாற்றுகின்ற கூட்டுறவுச் சங்கத்தினூடாக அனுப்பப்படுவதுடன் பதிவு செய்வதற்காய கட்டணத்தையும் (ரூபா 5/-) பயிலவுள்ள பாடத்திற்கு அல்லது பாடங்களுக்குரிய கட்டணங்களையும் கொண்டதாகவிருத்தல் வேண்டும். செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை சபையின் அலுவலகத்திற்கு நேரிலேயேசென்று செலுத்தலாம். அல்லது ஸ்ரீலங்கா தேசியக்கூட்டுறவுச் சபையின் பேரில் எழுதப்பட்டதான காசுக்கட்டளை அல்லது அஞ்சற்கட்டளை மூலம் செலுத்தலாம்.

பரீட்சை:-

பொல்கொல்லையிலுள்ள கூட்டுறவுப் பாடசாலையே இப்பரீட்சையை நடாத்தி, சான்றிதழையும் வழங்கும். ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்திலும், டிசெம்பர் மாதத்திலும் பரீட்சைகள் நடத்தப்படும். அஞ்சல் மூலமமைந்த பயிற்சி மூலம் படித்துள்ள பாடத்தினை அல்லது பாடங்களை மாத்திரமே இப்பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் எடுக்கலாம். பரீட்சார்த்தி சித்தியெய்துகின்ற ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும். மூன்று பாடங்களிலும் சித்தியெய்துபவர்களுக்கு மாத்திரமே கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறிக்குப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே, இப்பயிற்சி நெறி பற்றிய விபரங்கள் அடங்கிய விபர மஞ்சரி தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு "பொறுப்பதிகாரி, அஞ்சல் மூலமமைந்த பயிற்சி நெறித் தொகுதி, ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை, 455, காலி வீதி, கொழும்பு-3" என்ற முகவரிக்கு எழுதவும்.

## வவுனியா மாவட்டக்குழு

வவுனியா மாவட்டக்குழு உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். திருவாளர்கள் P சந்திரசேகரி, K. முத்தையா, S. நாகலிங்கம், A. அரியகுட்டி, P. V. கருணாகரன், P. உக்குநாயுடு

பின்வருவோர் கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர். திருவாளர்கள் N. N நாகலிங்கம் (காரியாலயப் பரிசோதகர்) P. கணேசமூர்த்தி (பாடசாலைப் பரிசோதகர், செல்வி P. சிதம்பரப்பிள்ளை (மேலதிக அரசாங்க அதிபர்)

[முற்றொடர்]

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

வலுப்படுத்தலும், வளர்ச்சியும் 1946-57

(அ) பொதுச்சுற்றுய்வு

இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்த வரை 1946 தொடக்கம் 57 வரையிலான காலமெல்லை தனியான வளர்ச்சிப்படி எனலாம். 1942 தொடக்கம் 45 வரை ஏற்பட்ட பரபரப்பான விரிவாக்கல் வேலைகளுக்குப்பின்பும், பாவனையாளர் கூட்டுறவு இயக்கத்தின் தோற்றுவாய்க்குப் பின்பும் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அதனை வலுப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்கள உத்தியோகத்தரும், பழைய உறுப்பினர்களும், புதிய பண்டசாலைச் சங்கங்களை விமர்சனக்கண்ணோட்டத்துடன் நோக்கலாயினர். மரபிற்கு மாருக உறுப்பினர்களுக்குப் போதிய கல்வி புகட்டப்படாமலும் நிருவாகசபை உறுப்பினர்களுக்குப் போதிய பயிற்சியளிக்கப்படாமலும் சங்கங்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தன. புதிய பண்டசாலைச் சங்கங்களில் அதிக உறுப்பினர் இருந்தனர். உறுப்பினர்க்கு ஒருவருக்கு ஒருவரைத் தெரியாது அதற்கான அவசரத் தேவையும் இருக்கவில்லை. சங்கங்கள் மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடையனவாய் இருந்தன. மேலும், அவற்றிற்கும் குறுகிய பொருளாதார நோக்கே இருந்தது. அதாவது பாவனைப்பொருள்களை நியாயமான விலையில் வழங்குவதேயாகும். பங்கீட்டு அடிப்படையில் தமக்கு வழங்கப்படும் பொருள்களைப் பெறுவதிலேயே பெரும்பாலான உறுப்பினர் அக்கறை செலுத்தினர். அநேகமான செல்வம் கொழித்த பகுதிகளிலே உறுப்பினர் பண்டசாலைக்குச் சென்றதேயில்லை. அவருடைய வேலைக்காரர்கள் பண்டசாலைக்குச் சென்று பொருள்களைப் பெற்றனர். வழங்கீடு நிலைமை ஓரளவு சீரானதும்

கொழும்பு மாநகரிலுள்ள பல பண்டசாலைச் சங்கங்கள் நட்டமடையத் தொடங்கின. இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பொருளாதார ரீதியாக உருப்படாத சங்கங்கள் இருந்தன. இதனால் சங்கங்களைத் திருத்தி அமைப்பதற்கும், மறுசீரமைப்பதற்கும் ஒருங்கமைப்பதற்கும் நடவடிக்கைகள் புத்திபூர்வமாக மேற்கொள்ளப்பட்டன. இவை மேற்கொள்ளப்படாத நிலையின் மாற்றுவழி அதாவது பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டது. 1946க்கும் 57க்குமிடையில் சங்கங்களின் தொகை 4034ல் இருந்து 2569 ஆகக் குறைந்தது.

மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய கடனுதவு சங்கங்கள் 1945ல் தொகையளவில் இரண்டாவது அதிகப்படியான வகைச் சங்கங்களாக இருந்தன. போர்க்காலத்திலும் அதற்குச் சற்றுப் பின்பும் இவ்வகைச் சங்கங்கள் அதிகம் இயங்கவில்லை. மக்களிடம் கிராமவாசிகள் உட்பட கைவசமிருந்த பணவருவாய் அதிகரித்திருந்தது. கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டதுடன் சேமிப்புகள் அதிகரித்திருந்தன. ஏப்ரல் 1945 இறுதிக்கும், ஏப்ரல் 1949 இறுதிக்குமிடையில் கடனுதவு சங்கங்களின் தொகை 1696ல் இருந்து 1891 ஆக மட்டுமே உயர்ந்தது. ஆனல் 1955 அளவில் பண்டசாலைச் சங்கங்களைவிட கூடுதலான கடனுதவு சங்கங்கள் இயங்கி வந்தன. 1957ம் ஆண்டு இறுதியில் கடனுதவு சங்கங்களின் தொகை 3581. உற்பத்தி, சந்தைப்படுத்துதல் சங்கங்கள் தோன்றியிருந்தும் அவை அதிக, அத்துணை கண்டிப்பான நிபந்தனைகளின்றி கூடுதலான அளவில் கடன் வசதிகளைச் செய்து கொடுத்திருந்தும் இவ்வதிகரிப்பு ஏற்பட்டது ஈண்டு குறிக்கற்பாலது. 1945 ஏப்ரல் இறுதியில் உற்பத்தி சந்தைப்படுத்துதல் சங்கங்களின். தொகை 158. 1957ம் ஆண்டு இறுதியில் இவற்றின் தொகை 2126 ஆக உயர்ந்தது.

1946 தொடக்கம் 57 வரையிலான கால எல்லையில் கூட்டுறவு அமைப்பில் ஏனைய துறைகளும் வளர்ச்சி கண்டன. மாகாண அல்லது மாவட்ட வங்கிகளினதும் கடனுதவு சங்கங்களின் சமாசங்களினதும் தொகை அதிகரித்தது. இலங்கையிலுள்ள கடனுதவு சமாசங்

கள் ஐக்கிய அமெரிக்காவி லுள்ள சமாசங்களிலிருந்து வேறுபடுகின்றன. இலங்கையில் இவை கூட்டுறவு கடனுதவு சங்கங்களின் சமாசங்களாக விளங்குகின்றன. உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களில் நிருவாகத்தையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்பொருட்டே நிறுவப்பட்டன. இவை கடன் வழங்கும் நிறுவனங்களல்ல. 1948ல் கூட்டுறவு உச்ச வங்கி நிறுவப்பட்டது. இவ்வங்கி கூட்டுறவு வங்கி முயற்சிகளுடன் வர்த்தக வங்கி முயற்சிகளையும் மேற்கொண்டது. இவ்வங்கி கொழும்பிலிருந்து கணக்குத் தீர்வு செய்யும் நிலையத்தில் உறுப்புரிமை வகித்தது. இதன்மூலம் நாட்டின் ஒழுங்கமைக்கப்பட்ட பணச்சந்தையுடன் கூட்டுறவு நிதியமைப்பு முக்கிய தொடர்பு கொண்டிருந்தது.

பாடசாலைகளில் பாடசாலை வழங்கீடு சங்கங்கள் நிறுவப்பட்டதன் மூலம் பாடசாலை மாணவர் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தையும், நடைமுறைகளையும் அறிவதற்கு வாய்ப்புப் பெற்றன. இச்சங்கங்களில் பெரும்பாலானவை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் பதிவு செய்யப்படவில்லை. ஏப்ரல் 1945ம் ஆண்டு இறுதியில் இவ்வகைச் சங்கங்களின்தொகை 46. 1957 டிசம்பர் இறுதியில் இவற்றின்தொகை 1953 ஆக உயர்ந்தது. இவற்றில் 43 மட்டுமே பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்.

கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடித்தலில் கூட்டுறவு இயக்கம் கூடுதலான வேறுபட்ட உத்திகளைக் கையாண்டது.

"போக்குவரத்து வேறுவகைகள்" என்ற சங்கங்களின்தொகை முப்பத்திமூன்றிலிருந்து இருநூற்றி எட்டாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர் மன்றங்களும், மகளிர் கழகங்களும் 1956ம் ஆண்டில் தொடங்கப்பட்டன. அதே ஆண்டில் அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் நிறுவப்பட்டது. இக்கால எல்லையில் சங்கங்களின் மொத்தத்தொகை 6436 லிருந்து 10812 ஆக உயர்ந்தது. 1950ம் ஆண்டளவில் கூட்டுறவுக்கல்லூரியில் அந்நிய நாட்டு மாணவர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர். சறவாக்கைச் சேர்ந்த இரு உத்தியோகத்தரே இவ்வாறு 1950ல் முதன் முதல் அனுமதிக்கப்பட்ட அந்நிய நாட்டு மாணவர்களாவர்.

ஏப்ரல் 1949ல் கூட்டுறவுப்பிரச்சாரப்பிரிவு ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டது. இப்பிரிவிற்கு கூட்டுறவு உதவிப்பதிவு காரியஸ்தர் திரு. ஆ. செம்புக்குட்டி ஆராய்ச்சி பொறுப்பாக இருந்தார். இப்பிரிவிற்கு படப்பிடிப்பு, திரைப்படக் கருவியும் ஏனைய கருவிகளும் வழங்கப்பட்டன. 1950ல் கூட்டுறவுக்கல்லூரி அதிபரும் பிரச்சாரத்திற்குப் பொறுப்பாக இருந்த உதவிப் பதிவுகாரியஸ்தரும், பிரித்தானியாவிலும் ஐரோப்பாக்கண்டத்திலும் நடைபெற்று வந்த கூட்டுறவுக் கல்விப் பிரச்சார முயற்சிகளை அறியும்பொருட்டு கல்விச்சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டனர். 1952ல் கல்லூரி அதிபரின் அறிக்கை ஓர் அமர்வு அறிக்கையாக வெளியிடப்பட்டது.

கூட்டுறவு விரிவாக்கல் சேவைகளுக்கும் புதிய அழுத்தம் கொடுக்கப்பட்டது. கூட்டுறவுக்கல்விவட்டங்கள் உருவாக்கப்பட்டதுடன், அஞ்சல் பயிற்சியும் தொடங்கப்பட்டது. மேலும், கூட்டுறவுக் கல்வியைப்பற்றிய ஆலோசனைகள் அனைத்துலகத் தொழில் நிறுவனத்தின் வல்லுனர்களிடமிருந்து பெறப்பட்டன. கடற்றொழிலாளருக்குக் கூட்டுறவுக் கல்வி புகட்டுவதுபற்றி ஒரு வல்லுநரின் ஆலோசனைகள் பெறப்பட்டது

1950ம் ஆண்டில் நடைபெற்ற அகில இலங்கை கூட்டுறவு மகாநாடு-இதுவே மிகப்பிரமாண்டமான மகாநாடு – இக்கால எல்லையில் மிக முக்கிய நிகழ்ச்சியாகும்.

மாகாண ரீதியாக சங்கங்களின் வளர்ச்சி வருமாறு:

| மாகாணம் | 30-4-45 | 30-4-48 | 30-4-51 | 31-12-54 | 31-12-57 |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 1506 | 1509 | 1549 | 1851 | 2012 |
| வட ,, | 945 | 959 | 933 | 1293 | 1506 |
| மத்திய ,, | 983 | 1031 | 1024 | 1175 | 1255 |
| வடமத்திய ,, | 165 | 179 | 284 | 424 | 562 |
| தென் ,, | 904 | 927 | 1069 | 1436 | 1511 |
| வடமேல் ,, | 749 | 711 | 809 | 1043 | 1233 |
| சப்பிரகமுவா ,, | 563 | 590 | 687 | 939 | 1060 |
| ஊவா ,, | 216 | 248 | 347 | 531 | 638 |
| கிழக்கு ,, | 355 | 395 | 458 | 731 | 1035 |
| மொத்தம் | 6392 | 6559 | 7210 | 9425 | 10812 |

(வளரும்)

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும்

ஐயா,

# சர்வதேச கூட்டுறவுத் தின விழா

இவ்வாண்டு சர்வதேசகூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப்போட்டிகள் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

1. 6-ம் வகுப்பிலிருந்து 9-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பின்வரும் விடயங்கள் ஒன்றைப் பற்றி கட்டுரை வரையலாம். அவை 250 சொற்களுக்கு மேற்பட்டனவையாக இருக்க வேண்டும்.

   அ. ''கூட்டுறவு உங்களை அழைக்கின்றது''.

   ஆ. ''நமக்கு நாமே உதவி செய்தல் கூட்டுறவாகும்''.

2. 10-ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பின்வரும் விடயங்கள் ஒன்றைப் பற்றி 1000 சொற்களுக்கு மேற்பட்டனவையாக கட்டுரை வரையலாம்.

   அ. ''வாழ்க்கைச் செலவின் உயர்வும், நுகர்ச்சிக் கூட்டுறவும்''.

   ஆ. ''பிராந்திய அபிவிருத்தியும், கூட்டுறவு இயக்கமும்''.

## போட்டி நிபந்தனைகள்

1. சகல கட்டுரைகளும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை பசார் வீதி, வவுனியா, என்ற விலாசத்திற்கு 15-5-74 க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.
2. கட்டுரைகள் அதிபர் / தலைமை ஆசிரியரின் உறுதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கட்டுரை எழுதுபவர்கள் தங்கள் சொந்தக் கையெழுத்தில், புஸ்ல்காப் பத்திரத்தில் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாகவும், துப்பரவாகவும் எழுதுதல் வேண்டும்.

**பரிசில்கள் :** மாவட்ட ரீதியிலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும், முதல் மூன்று இடங்களில் வெற்றியீட்டுபவர்களுக்கு முறையே ரூபா 30/-, 20/-, 15/- ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும். சிறந்த கட்டுரைகள் தேசிய ரீதியில் கணிக்கப்படும் பொழுது ஒவ்வொருபிரிவிலும், முதல் மூன்று இடங்களில் வெற்றியீட்டுபவர்களுக்கு. முறையே ரூபா 100/-, 75/-, 50/- ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி போட்டி விபரங்களை உங்கள் பாடசாலை மாணவர்களுக்கு விளம்பரப்படுத்துவதோடு, எங்களுக்கு ஆதரவு தரும் படி வேண்டுகிறோம்.

க. கணேசலிங்கம்,
காரியதரிசி,
ஸ்ரீ. ல. தே. கூ. சபை,
வவுனியா.

சண்முகலிங்கம்
க. உ. ஆணையாளர்,
வவுனியா.

24-4-74.

# சட்ட மறுப்பு இயக்கம்

சட்ட மறுப்பு இயக்கம் குறித்து 1974 ம் ஆண்டு சித்திரை மாதம் 20ந் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்வரும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. ஜி. எஸ். தயானந்தா கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

''இன்று நாட்டில் நிலவி வரும் பலதரப்பட்ட பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கும் நோக்கமாக கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய, கைத்தொழில் அபிவிருத்தித் துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கூட்டுறவுப் பண்ணைகள், கூட்டுறவுக் கிராமங்கள், இளைஞர் குடியேற்றப் பண்ணைகள், மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற முயற்சிகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாற்றி, நாட்டில் நிலவும் இளைஞர் வேலையில்லாப் பிரச்சினையைக் கூட்டுறவு முயற்சிகளின் மூலம் தீர்க்க முயன்று ஆண் பெண் இருபாலாரும் உட்பட ஒரு லட்சத்துக்கு அதிகமானவர்களுக்கு வேலை வசதியளித்துள்ளது. இவற்றுடன் தொண்ணூறு இலட்சம் நுகர்ச்சியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பிரதான உணவுப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றது. எமது நாட்டை வளங்கொழிக்கச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் பதவி மோகம் கொண்ட எதிர்க் கட்சியினரால் ஆரம்பிக்கப்படவிருக்கும் சட்ட மறுப்பு இயக்கம், எமது அபிவிருத்தித் திட்டங்களைப் பாதிக்க வல்லதாகவும், நாட்டிலே குழப்பத்தையும் பொது

மக்களுக்கு பலதரப்பட்ட இடையூறுகளையும் விளைவிக்கக் கூடியதாகவும் அமையும். இவர்களினது இந்நடபடிக்கை பதினைந்து இலட்சம் கூட்டுறவாளர்களினாலும், முப்பத்தையாயிரம் கூட்டுறவுச் சங்க ஊழியர்களினாலும் பகிஷ்கரிக்கப்படல் வேண்டுமென்ற தீர்மானம் 1974ம் ஆண்டு சித்திரை மாதம் 20ந் திகதி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையில் நடைபெற்ற மதியுரைக் குழுக் கூட்டத்திலும், பணிப்பாளர் சபைக் கூட்டத்திலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தேசிய கூட்டுறவு இயக்கத்தின் தலைமைச் சங்கமாக அமைந்திருக்கும் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை சகல கூட்டுறவுச் சங்கங்களையும், அவைகளுடன் இணைந்துள்ள பதினைந்து இலட்சம் அங்கத்தவர்களையும், முப்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட கூட்டுறவு ஊழியர்களையும் அரசாங்கத்தினால் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச் செய்வதற்கு எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் களங்கமற்ற ஆதரவையும் வளர்க்க முன் வருமாறும் கேட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன."

—o—

## யாழ் மாவட்டக்குழு

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் மாவட்டக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்

திருவாளர்கள் சு. கந்தையா (தலைவர்) க. இ. குமாரசாமி (உப தலைவர்) இ. பொ. குமாரசாமி, ச. முருகேசு, அ. பொன்னுத்துரை, ரி. கனகராசா

# இன்றைய இலங்கைப் பொருளாதாரத்தில் கூட்டுறவின் பங்கு

பொ. துரையப்பா பீ. ஏ. (புவியியல்) இலங்கை

புவியியல் ரீதியாக நோக்குமிடத்து இலங்கை இயற்கை வளம் நிறைந்த நாடு. நம்நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை, தேசியக் கடன், அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை ஆகிய பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இலங்கையின் இன்றைய பொருளாதாரம் மறுசீரமைக்கப்பட்ட கூட்டுறவுத் துறையினூடாக வளர்கின்றது; வளர்க்கப் படுகின்றது.

இன்று சிறு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முறையில் செயலாற்றி அரசாங்கத்தால் அளிக்கப்படும் சேவைகளின் பயன்களைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். இச்சிறு உற்பத்தியாளர்களினால் இன்று நாட்டின் தேசிய வருமானம் பெருக்கப்படுவதைக் காணமுடிகிறது.

இலங்கையின் பொருளாதாரம் கிராமிய பொருளாதார அபிவிருத்தியால் தான் வளர்ச்சியடையும் என்பதை இன்றைய கிராமிய நிறுவனமாகிய ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காட்டி நிற்கின்றன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விநியோகம், உற்பத்தி, கொள்வனவு, சந்தைப்படுத்துதல், கடன் வழங்கல், சேமிப்பு முதலிய பல நோக்கங்களைக் கொண்டு இயங்குகின்றது. கூட்டுறவுச் சங்கம் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுப் பொருட்களையும், கொள்வனவு செய்து உள்நாட்டுப் பொருட்களையும் சந்தைப்படுத்துகின்றது.

கிராமிய இயற்கை வளம் (மூலப் பொருள், மனித சக்தி) முழுமையாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக பிரதேச அபிவிருத்திச் சபையால் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டு தொழிலாளர் உழைப்புக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. விவசாயம், சிறு கைத்தொழில் விரிவடைந்து வருகின்றன. இதனால் வீடமைப்பு, நீர்ப்பாசனத் திட்டங்களும் கூடிக் கொண்டு வருகின்றன. கிராமிய பொருளாதாரம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்துச் செல்வதை கிராமிய அபிவிருத்திப் பயிற்சி ஆராய்ச்சி

நிலையத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். பொது மக்களும், அரசாங்கமும் இணைவு பெறுவதை இன்றைய பிரதேச அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்ணைகள் நாட்டின் பல பாகங்களிலும் அமைத்துள்ளன. சிறந்ததொரு கூட்டுறவுக் கிராமத்துக்குப் ''லஸ்ஸனகம்'' உதாரணமாகும். விவசாயக் கைத்தொழில், கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுக் கடனை வழங்கி, உற்பத்தியைப் பெருக்கி, சந்தைப் படுத்துகின்றன. இதனால் நாட்டின் இறக்குமதி குறைந்தும், ஏற்றுமதி கூடியும் காணப்படுகிறது. இன்று மூன்னூற்றுக்கு மேற்பட்ட ஆரம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. அநேகமாக ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் ஒரு கிராமிய வங்கி உண்டு. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று கிராமிய நிதி நிறுவனமாகச் செயற்படுகின்றது. கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுச் சட்டத்துக்கு அமைய அங்கத்தவர்களின் பொருளாதார சமூக நலன்களை வளர்க்கின்றது. வளர்ந்து வரும் குடிப் பெருக்கமும், உணவுப் பற்றுக் குறையும் நாட்டு மக்களை விரக்தி நிலைக்குத் தள்ளி விடுகின்றது. இது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு கொண்டுள்ளது. கூட்டுறவுத் துறை இளம் சந்ததியினருக்குப் பாடசாலை சிக்கன சேமிப்புச் சங்கங்கள் மூலம் கூட்டுறவுக்கல்வி அளிக்கின்றது. அத்துடன் கிராமத்தின் கல்வி, சுகாதாரம், சமூக உறவுகளின் கட்டுக்கோப்பையும் கவனித்துவருகிறது.

இன்று கூட்டுறவுச் சங்கம் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய கமத்தொழிலுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. இதனால் சமூகத்தில் கமக்காரனுக்கு மதிப்புக் கூடியுள்ளது. இன்று கமக்காரன் எழுது வினைஞரின் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவனாகக் காணப்படுகிறான். படித்துப் பட்டம் பெற்று கலையற்றிருக்கும் பட்டதாரிகளின் சுதேச ஆற்றலை கூட்டுறவுச் சங்கம் பெற்று, சிறந்த தலைமையைக் கொண்டு இயங்கி நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்து வருகின்றது. ஆகவே கூட்டுறவே நாட்டுயர்வாகும்.

நிழற்பிரிவில் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஜெயவாணி நாகலிங்கம்
(மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

பண்டைக்காலத்தில் மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்தனர். தம் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், இடையூறுகளிலிருந்து தப்பிக் கொள்வதற்கும், பகைவர்களை வெல்லுவதற்கும் ஒற்றுமை தேவையாக இருந்தது. மக்கட் கூட்டம் விரிவடைய ஒற்றுமையின் தேவையும் விரிவடைந்தது. ஒற்றுமையின் முதிர்ந்த நிலையே உயர்ந்த நாகரீகம் என்று கருதும் நிலையும் ஏற்படலாயிற்று. இன்று வாழ்க்கையின் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒற்றுமை உயிர் நாடியாக விளங்குகின்றது.

குடும்ப வாழ்வை எடுத்துக் கொண்டால் தந்தை நாளெல்லாம் பாடுபட்டு உழைக்கின்றான். தாய் மற்றைய கருமங்களைச் செய்து யாவும் வாழும்படி பணிபுரிகின்றாள். மக்கள் ஏவல்கள் செய்கின்றனர். குடும்ப வளர்ச்சி கருதி யாவரும் ஒற்றுமையாக முயல்கின்றனர். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு நிரம்பியவழி, அன்பு, நட்பு, பண்பு, முதலிய சீரிய குணங்கள் ஓங்கி வளரும்.

இன்றைய இளைஞர்களே எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குபவர்கள். எதிர்காலச் சமுதாயம் ஒற்றுமை மலிந்து இலங்க வேண்டுமானால் பள்ளிப்பருவத்திலேயே ஒற்றுமைக்கு வித்திடப்பட வேண்டும். மாணவரிடம் நீடித்த ஒற்றுமை நிலவுமானால் ஒருவருக்கொருவர் துணையாகித் தமது இலட்சியம் நிறைவேற்றப் பலவழிகளிலும் உழைக்க வல்லவர் ஆவர். அவர்களிடம் இளமை முதற் கொண்டே கண்ணியம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி முதலிய உயர் குணங்கள் ஒளிவிட்டுப் பிர

சாசிக்கத் தொடங்கும். ஆசிரியர்களும் முன்மாதிரியாக ஒற்றுமை காத்து வருவரேல் தமது புனிதமான கல்விப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி நிலையான இன்பந்துய்க்க வல்லவராவர்.

கமத்தொழிற்துறையை எடுத்துக்கொண்டால் உழவர் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் இருப்பின் உழவு, நாற்று நடுகை, நீர் பாச்சல், அறுவடை போன்ற பல தொழில்களிலும் நன்கு உதவலாம். குறைந்த உழைப்புடன் நிறைந்த பயனை எய்தலாம். முற்காலத்திலே கிராமத்தவர்கள் ஒற்றுமை உணர்வினால் பிணிக்கப்பட்டு அயலவர்களின் வாழ்வு, தாழ்வுகளில் பெருமளவு உதவினர். கிராமத்தில் ஒற்றுமை நிலவியதால் உரிய பண்புகள் வளர்ச்சியுற்றன. இன்றோ நகரத்திலிருந்து நான் மட்டும் வாழ்ந்தாற் போதும் என்ற கொள்கை கிராமத்திற்குள் புகுந்துவிட்டது.

இந்நிலை வளர்ந்து கொண்டு செல்லுமானால் கிராமமக்களிடம் அன்பு, பண்பு, நட்பு முதலிய உயர் குணங்களும், பிறருக்கு உதவவேண்டும் என்னும் பரந்த குணமும் முற்றாக அகன்று விடும். வாழ்வு செழிப்பற்று வறண்டுவிடும். கிராமங்களின் நலத்தில் நாட்டமுள்ளார் அனைவரும் ஆங்கு ஒற்றுமை உரம் பெறச் செய்து மீண்டும் பழைய நிலைமை நிலவத் தொண்டாற்ற வேண்டும்.

ஒற்றுமையினால் அன்பு வளர்கிறது. அருள் வளர்கின்றது. பிறரை நேசிக்கும் பெருங்குணம் வளர்கின்றது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை விரிவடைகின்றது. போட்டி, பொறாமை, அவலம், கவலை முதலிய தொல்லைகள் நீங்குகின்றன. அறவாழ்வு கைகூடுகின்றது.

புதுமைக்கவி புரட்சிக் கவி என்றெல்லாம் போற்றப்பட்ட மகாகவி பாரதியார் தமிழர் சமுதாயத்தை நோக்கினார். இயல்பாகவே அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்தோடிய கருணை வெள்ளம் தனது இனம் வாழவேண்டும், தனது மொழி வாழவேண்டும் என்று விழைந்தது. தமிழர்களிடத்தில் ஒற்றுமை உணர்வு குறைந்திருத்தலைக் கண்டார். அவர் இதயம் துடித்தது. அதனால் ஒற்றுமையின் அவசியத்தைக் குறித்து.

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கெது வேண்டும்.

என்று முழங்கினர். பண்டைத் தமிழ்ப் புலவோர்களும் ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்திச் சென்றுள்ளனர்.

இவற்றிலிருந்து ஒற்றுமையே வாழ்வின் உயிர் என்பது புலனுகிறது. எனவே, மக்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையை வளர்த்து உயர்ந்த இன்பத்திற்குவழி தேடுதல் வேண்டும்.

---

## மன்னர் கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலையில் கூட்டுறவுப்பணியாளர் சாதாரணபிரிவு பரீட்சையில் சித்தியடைந்தோர்

**முதலாம் பிரிவு**

A. யூலியன் புஷ்பராசா, K. உருத்திராபதி

**இரண்டாம் பிரிவு**

S. அமிர்தநாதன், S. A. அப்துல் ரசீக், A. முகமட் முருசீன், S. சகுந்தலா, R. சிவலிங்கம், K. முகமட் அசீஸ், J. விக்டர் ஜெயபாலா, A. ஸ்ரீபிஞ பெர்ஞன்டோ, W. மேரீ லலிதா

**மூன்றும் பிரிவு**

S. M. K. காதர், A. R. முகமட் நளீம், S. ஸசடீன், R. இரத்தினதேவி, A. அப்துல் கபூர், A. செபமாலை வாஸ்

**நூன சித்தி**

V. வள்ளியம்மை, A. புளோரன்ஸ் மஞ்சுளா, A. அன்ரன் ஜெயராசா குருச், A. மேரியா அஞ்சலா E. அன்ரன் மாசிலஸ். E. டொன் பொஸ்கா குருஸ், V. கிறிஸ்டீன் குருஸ், சி. சண்முகநாதன் M. கோபாலன்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை
அதிபர்களுக்கும்

ஐயா,

# சர்வதேச கூட்டுறவுத் தின விழா

இவ்வாண்டு கூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகள் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

1. 6-ம் வகுப்பிலிருந்து 9-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பின்வரும் விடயங்கள் ஒன்றைப் பற்றி கட்டுரை வரையலாம். அவை 250 சொற்களுக்கு மேற்பட்டனவையாக இருக்க வேண்டும்
   அ. "கூட்டுறவு உங்களை அழைக்கின்றது".
   ஆ. "நமக்கு நாமே உதவி செய்தல் கூட்டுறவாகும்".
2. 10-ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் பின்வரும் விடயங்கள் ஒன்றைப் பற்றி 1000 சொற்களுக்கு மேற்பட்டனவையாக கட்டுரை வரையலாம்.
   அ. "வாழ்க்கைச் செலவின் உயர்வும், நுகர்ச்சிக் கூட்டுறவும்".
   ஆ. "பிராந்திய அபிவிருத்தியும், கூட்டுறவு இயக்கமும்".

## போட்டி நிபந்தனைகள்

1. சகல கட்டுரைகளும், கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு அலுவலகம், திருக்கோணமலை, என்ற விலாசத்திற்கு 15-5-74 க்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.
2. கட்டுரைகள் அதிபர் / தலைமை ஆசிரியரின் உறுதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கட்டுரை எழுதுபவர்கள் தங்கள் சொந்தக் கையெழுத்தில், புல்ஸ்காப் பததிரத்தில் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாகவும், துப்பரவாகவும் எழுதல் வேண்டும்.

**பரிசில்கள் :** மாவட்ட ரீதியிலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும், முதல் மூன்று இடங்களில் வெற்றியீட்டுபவர்களுக்கு முறையே ரூபா 30/-, 20 -, 15/- ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும். சிறந்த கட்டுரைகள் தேசிய ரீதியல் கணிக்கப்படும் பொழுது ஒவ் வொரு பிரிவிலும், முதல் மூன்று இடங்களில் வெற்றியீட்டுபவர்களுக்கு, முறையே ரூபா 100/-, 75/-, 50/- ரொக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி போட்டி விபரங்களை உங்கள் பாடசாலை மாணவர்களுக்கு விளம்பரப்படுத்துவதோடு, எங்களுக்கு ஆதரவு தரும்படி வேண்டுகிறோம்.

க. கணேசலிங்கம்,
பதில் காரியதரிசி,
சி. ல. தே. கூ. சபை,
திருக்கோணமலை.

க. இராமதாசன்,
கூ. உ. ஆணையாளர்,
திருக்கோணமலை.
24-4-74.

# ஆறு ஐங்கியத் தலைவர்கள்

பி. வி. மிக்கேற்பிள்ளை

(வவுனியா ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைப் பகுதியில் கூட்டுறவுத் தொண்டாற்றி அமரத்துவமடைந்தவர்களில் மக்களால் அதிகம் நேசிக்கப்பட்ட தொண்டர்கள் சிலரையாவது கூட்டுறவாளர்களாகிய நாம் நினைவு கூர்ந்து அவர்கள் காட்டிச் சென்ற வழியைப் பின்பற்றுவது சிறந்ததாகும்.

இவர்களுள் திரு. அருளம்பலம் ஜே பி. அவர்களும் ஒருவராவர். வழக்கறிஞராகிய இவர் கூட்டுறவு மூலம் மக்களுக்கு ஊழியம் செய்ய முற்பட்டார். சில சங்கங்களுடன் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினதும், வடமாகாண யாழ்-கூட்டுறவு வங்கியினதும், கௌரவ செயலாளராகவும், பின்னர் அவ்வங்கியின் தலைவராகவும் தொண்டாற்றி மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றார். கூட்டுறவுக் கல்லூரியின் அதிபராகவும் ''ஐக்கியதீபத்தின்'' ஆசிரியராகவும் திறம்படக் கடமையாற்றினார். கூட்டுறவு இயக்கத்தில் அவர் ஆர்வமாயிருப்பதைக்கண்ட அரசினர், அவர் மேலும் கூட்டுறவின் அறிவைப்பெறுவதற்கு அவரைத்தங்கள் செலவில் மேல் நாட்டுக்கனுப்பிவைத்தனர். அவர் அங்கிருந்து வந்ததும் மேல் நாடுகளின் கூட்டுறவைப் பற்றி பத்திரிகைகளின் எழுதியதுடன் ''கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு'' என்னும் புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார். ஐக்கிய வாழ்வு வாழ்ந்த அன்னார் 8-3-62 இல் காலமானார்.

பெரியார் வீ. வீரசிங்கம் அவர்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக பல வருடங்கள் திறம்படச் சேவை செய்ததுடன் கூட்டுறவு இயக்கத்திற்கும், கூட்டுறவாளர்களுக்கும் தொண்டாற்றினார். 1913 ம் ஆண்டு

தாபிக்கப்பட்ட வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு அதற்காக உழைத்து அதை மேல் நிலை அடையச் செய்தார். அத்துடன் யாழ்-கூட்டுறவு வங்கியில் உயர் பதவி வகித்ததுடன் 1950ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சகல இலங்கைக் கூட்டுறவாளர்களுக்கும் உகந்த தொண்டாற்றினார். இவர் பாராளுமன்றப்பிரதிநிதியாக இருந்த பொழுது மந்திரிமார்களாலும், பிரதிநிதிகளாலும், மக்களாலும் நேசிக்கப்பட்டு வந்தார். இவர் சேவையால் உயர்ந்த யாழ் - கூட்டுறவியக்கத்தைப் பார்ப்பதற்கு, படிப்பதற்குப் பலதேசங்களிலிருந்து பலர் வந்து போனதால் உலகில் யாழ்ப்பாணம் கூட்டுறவு இயக்கத்தில் சிறந்து விளங்கியது. இவர் கூட்டுறவு மகாநாடுகளில் மட்டுமல்ல, இலங்கையின் பல பகுதிகளிலும் சென்று கூட்டுறவுச் சொற்பொழிவாற்றி வந்தார். இவரது அன்பான வார்த்தைகளையும், கனிவான பேச்சுகளையும், திறமான விவாதங்களையும் கேட்பதற்குப் பலர் துடித்துநின்றனர். அவரை கூட்டுறவுப் பெரியார், கூட்டுறவுத் தந்தை. கூட்டுறவுத் துணைவர், கூட்டுறவு வழிகாட்டி, நேர்மையின் சிகரம் என்றே சகலரும் மதித்து அன்பு பூண்டிருந்தனர். இப் பெரியார் 5-12-64 ல் எம்மை விட்டு மறைந்தார். இவரது நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

திரு. மு. மதியாலசிங்கம் அவர்கள் போல் கொல்லை கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராயிருந்து இலங்காபுரியின் சகல கூட்டுறவுப் பரிசோதகர்களாலும், கூட்டுறவாளர்களாலும் மதிக்கப்பட்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளராக யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்டதும் வடபகுதி மக்கள் அவரை அறியக்கூடியதாயிருந்தது. மகாநாடுகளில் அவரது அரும் பெரும் போதனைகளை கேட்டு மகிழ்ந்தனர். யாழ்-கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அவர் வாக்கைத் தேவவாக்காக மதித்து அன்பு பூண்டொழுகினர். கூட்டுறவு மூலம் முன்னேறிவரும் வவுனியா

மாவட்டத்துக்கு அவர் மாற்றப்பட வேண்டு மென்று அரசினரால் தீர் மானிக்கப்பட்டதும் யாழ்ப் பாண மக்கள் கவலை கொண்டனர். என்றாலும் சந்தோஷமாக வழி அனுப் பிவைத்தனர். அவர் முதன் முறையாக 31-1-68 இல் முல்லைத்தீவில் அரசாங்க அதிபர் தலைமையில் நடை பெற்ற நெற்கொள்வனவு விடயமான கூட்டத்தில் சமுகமளித்து நன் மதிகளை உரைத்தார். அவர் அன் றே சில கிராமங்களையும் கூட்டுறவாளர்களையும் சந் தித்துப் பயணமானுர். அப் பயணம் அவரது கடைசிப் பயணமென்று எவராலும் மட்டிடமுடியாமற் போய் விட்டது. அவர் 8-2-68 இல் மரணமானுர்.

திரு. வே. சு. பொன்னையா அவர்கள் ஐக்கிய நாணய சங்கங்களின் கௌரவ மேற் பார்வையாளராகவும், கூட் டுறவு உபபரிசோதகராக வும், உதவி ஆக்க ஆணை யாளராகவும், அதிலிருந்து ஓய்வுபெற்றதும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் உபதலைவராகவும் அதன் நிர்வாகசபை அங் கத்தவராகவும், கூட்டுறவுக் கல்லூரி அதிபராகவும் கூட் டுறவுக்குப் பெரும் தொண் டாற்றினுர். அவர் போதனை யில் கடவுள் பக்தியும் பிறர் நேசமும் ஒலித்துக் கொண் டேயிருக்கும். யாழ்ப்பாண மக்களெல்லாரும் குடா நாட்டிற்கு வெளியில் குடியேறி கமச்செய்கையி லும் ஈடுபட்டுழைக்காவிட் டால் பஞ்சத்தின் வாயில் அகப்பட்டு வாட வேண்டிய காலம் வருமென்று இடித் துரைப்பார். மக்களை வன் னிப்பகுதியில் குடியேறுங் கள் என்று சொல்லி அவர் தானே வவுனியாவில் காணி வாங்கி வீடுகட்டி வாசஞ் செய்தார். விவசாயத்தில் நன்மை பெற்ற அப்பெரி யார் அவ்விடமுள்ள தமது வீட்டை தமது ஆச்சிரம மென்றே சொல்லுவார். நாங்கள் அவரை சந்திப் பதற்காக 22-1-70 இல் அவரது ஆச்சிரமத்துக்குப் போனபொழுது அவர் சுக வீனம் காரணமாக ஊருக் குப் போய்விட்டதாக அறிந் தோம். தமது ஜெனனபூமிக் குப்போன அவர் 5-2-70 இல் உலகவாழ்வை நீத் தார்.

திரு. ஆர். சி. செல்வர சுஜக் அவர்கள் கூட்டுறவுப் பரிசோதகராகவும், கூட்டு றவு உதவி ஆக்க ஆணையா ளராகவும், கூட்டுறவு சிரேஷ்ட ஆக்க ஆணையா ளராகவும் தொண்டாற் றினுர். கூட்டுறவுப்பரிசோத

கராயிருந்த காலத்தில் பல சங்கங்களை உண்டாக்கி மேன்மையுறச் செய்தார். அத்துடன் வடபகுதியில் நடக்கும் போதனை வகுப்புகளில் கலந்து சொற்பொழிவாற்றினார். கூட்டுறவு சிரேஷ்ட ஆக்க ஆணையாளராயிருந்த பொழுது கீழ்நோக்கிச்சென்ற பலசங்கங்களைத் திருத்தி நல்வழிப்படுத்தினார். திருந்தாத சங்கங்களைச் சட்டப்படி குலைப்பதற்கும் ஆவன செய்தார். சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளராயிருந்த பொழுது இருமாகாண கூட்டுறவாளர்களும், ஐக்கியத்திலும் பொருளாதாரத்திலும் மேன்மையுறப் பாடுபட்டார். போதனைவகுப்புகளிலும், கருத்தரங்குகளிலும், பயிற்சி வகுப்புகளிலும் பங்குபற்றி அறிவூட்டினார். அரசினர் சேவையிலிருந்து இளைப்பாறியதும் மேல் நாட்டுக்குப் பிரயாணமானார். ஆங்காங்கு கூட்டுறவுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றியதுடன், நைஜீரியாவில் கூட்டுறவுப் பதில் ஆணையாளராக ஆறு வருடம் கடமையாற்றித் தாயகம் திரும்பினார். இங்கே வந்ததும் மலையாளம் புகையிலை வியாபாரச் சங்கத்துக்குத் தலைவராகவும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினதும், யாழ்- கூட்டுறவு மாகாண வங்கியினதும் உபதலைவராகவும் சேவை செய்தார். இப்படிப்பல தொண்டுகள் புரிந்த இப்பெரியார் எம்மை விட்டு 2-11-71 இல் காலமானார்.

திரு. இ. இராசரத்தினம் அவர்கள் வவுனியாவில் கூட்டுறவுப் பரிசோதகராயிருந்த காலந்தொட்டே அப்பகுதியின் கூட்டுறவாளர்களால் அதிகம் நேசிக்கப்பட்டு வந்தார். கூட்டுறவு மூலம் மக்கள் நல்லவர்களாகவும், ஒற்றுமையுள்ளவர்களாகவும், வருமானமுள்ளவர்களாகவும் வாழவேண்டுமென்ற மனப்பான்மையுடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அயராதுழைத்தார். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளராகவும், சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளராகவுமிருந்து இளைப்பாறியதும் தமது ஆசிரியரும் கூட்டுறவுக் குருவுமாகிய பெரியார் வீரசிங்கம் அவர்களின் சேவையை தொடர்ந்து செய்தார். அதாவது வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத்தலைவராயிருந்து திறம்பட நடாத்தி அதன் சின்னமாக வீரசிங்கம் மண்டபத்தையும் நாலடுக்கு

கட்டிடத்தையும் நிறுவுவதற்கு கூட்டுறவாளர்களுடன் முன் நின்று உழைத்தவர். கூட்டுறவு மகாநாடுகளையும் திறமாக நடாத்தினர். மகாநாட்டுக் காலங்களில் பெரியார் வீரசிங்கம் அவர்களைப் போலவே தமது சொந்தப் பணத்திலிருந்து செலவழித்து கூட்டுறவில் முக்கியத்துவமுள்ளவர்களுக்கு மதியபோசன விருந்தளித்து வந்தார். யாழ்- ஐக்கிய மாகாண வங்கியின் தலைவராகவும், அதிகாரசபை அங்கத்தவராகவுமிருந்த இவர், ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுப் பேரவையின் உபதலைவராகவும் கடமையாற்றி சென்ற 27-11-73 இல் அமரத்துவமடைந்தார்.

சகோதர கூட்டுறவாளர்களே மேற்சொல்லப்பட்ட ஆறு தலைவர்களும் எங்களுக்குப் போதனையால் மாத்திரமல்ல சாதனையாலும் காட்டிய நன்மதிகளை நாங்கள் சிரமேற் கொண்டு நடப்போமானல் அதுவே நாங்கள் அவருக்குச் செய்யும் சேவையும், கைமாறுமாகும்.

## ஆண்டவன் சிரிக்கின்றன்

படித்துப் பட்டம் பெற்ற வைத்தியர் ஒருவர் வந்து நோய் வாய்ப்பட்ட குழந்தையைப்பார்த்து விட்டு அதன் தாயிடம் ''கவலை'' வேண்டாம். நான் சொஸ்தப்படுத்தி விடுகிறேன். குழந்தையின் உயிருக்கு நான் பொறுப்பு என்று கூறுகிறர். இப்படி வைத்தியர் பேசும்போதும் ஆண்டவன் நகைக்கிறன் என்கிறர் ராமகிருஷ்ண பரமஹம்சர். உயிருக்கு காவலும் எஜமானனும் வைத்தியன் அல்ல; அது ஆண்டவனுடைய திருவிளையாடல். அண்ணன், தம்பி இருவர் ஒரு குடும்பமாக இனிமேல் வாழ முடியாது என்று தீர்மானித்து நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள ஏற்பாடு செய்து விட்டார்கள். கயிற்றைப் பிடித்து வயலை அளந்து இது உன்னுடைய நிலம் தம்பி. இது என்னுடைய நிலம் என்று அண்ணன் சொல்லுகிறன். அப்போது ஆண்டவன் சிரிக்கிறன் என்கிறர் பகவான் ராமகிஷ்ணர். நிலையும், சுதந்திரமும் அற்ற ஒரு ஜீவன் ''இது என்னுடையது'' என்று பேசும்போது ஆண்டவன் சிரிக்காமல் என்ன செய்வான்.

# சிறிலங்கா தேசீய கூட்டுறவுச் சபை (மன்னர்)
# வருடாந்த அறிக்கை

சிறிலங்கா தேசீயக் கூட்டுறவுச் சபையின் மன்னர் மாவட்டக்குழு தனது வருடாந்த அறிக்கையை இரண்டாவது வருடாந்த மாவட்டக் கூட்டத்தில் மிக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

**அங்கத்துவம்:** மன்னர் மாவட்டத்திலிருந்து தேசீய கூட்டுறவுச்சபையில் ஆறு ப. நோ. கூ சங்கங்களும், மூன்று ஐக்கிய நாணய சங்கங்களும், இரு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் அங்கத்துவம் வகிக்கின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு :-

1. மன்னர் ப. நோ. கூ. சங்கம்.
2. மாந்தை மேற்கு ப. நோ. கூ. சங்கம்.
3. மாந்தை தெற்கு ,, ,, ,,
4. மாந்தை வடக்கு ப. நோ. கூ. சங்கம்.
5. நானாட்டான் பகுதி ,, ,, ,,
6. முசலி வடக்கு தெற்கு ,, ,,
7. மாந்தைப் பிரிவு மீனவர் கூ. சங்கம்.
8. மன்னர் பிரிவு மீனவர் கூட்டுறவுச் சங்கம்.
9. முருங்கன் ஐக்கிய நாணய சங்கம்.
10. தாராக்குன்று ஐக்கிய நாணய சங்கம்.
11. எருக்கலம்பிட்டி ,, ,, ,,

**மாவட்டக்குழுக் கூட்டங்கள் :**

இவ்வறிக்கைக் காலத்தில் பத்து மாவட்டக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. மாவட்டக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைவிட பின்வரும் மூன்று உத்தியோகத்தர்கள் ஆணையாளரால் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

1. சிறுகைத் தொழில் இலாகாவிலிருந்து ஒருவர்.
2. கல்வி இலாகாவிலிருந்து ஒருவர்.
3. கூட்டுறவு இலாகாவிலிருந்து ஒருவர்

## கல்வி அபிவிருத்தி வேலைகள்

1973 ம் ஆண்டு எமது சபை மன்னார் மாவட்டத்தில் 101 அங்கத்தவர்களுக்கு 6 பிரசாரக் கூட்டங்களையும், 41 ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழு உறுப்பினர்களுக்கு 7 பயிற்சி வகுப்புக்களையும், 373 ப. நோ. கூ. சங்கக்கிளைக்குழு உறுப்பினர்களுக்கு 36 பயிற்சி வகுப்புக்களையும், 56 ப. நோ. கூ. சங்கப்பணியாளர்களுக்கு 3 பயிற்சி வகுப்புக்களையும் 108 பாடசாலை மாணவர்களுக்கு இரு விரிவுரைகளையும் நடாத்தியுள்ளது.

| வகுப்புகளின் தொகை | பங்குபற்றியவர் | பங்குபற்றியவர்களின் தொகை | வகுப்புக்களின் தன்மை |
|---|---|---|---|
| 6 | அங்கத்தவர்கள் | 101 | பயிற்சி வகுப்பு |
| 7 | நெறியாளர் | 41 | ,, |
| 36 | சி. கு. உறுப்பினர் | 371 | ,, |
| 2 | பாடசாலை மாணவர் | 108 | விரிவுரை |
| 1 | அங்கத்தவர் | 15 | பயிற்சி வகுப்பு |

இப்பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்குப் பெரிதும் உதவியாக இருந்த காரியாலயப் பரிசோதகர் திரு. பி. மகாதேவ அவர்களுக்கு எமது சபை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண வகுப்புக்கள்

1973-ம் ஆண்டு எமது சபை மன்னார் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் இரு கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரணதர வகுப்புகளை நடாத்தியுள்ளது. முதலாவது பயிற்சி வகுப்பு தைமாதம் தொடக்கம். சித்திரை மாதம் வரை நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பு முடிவில், 19 மாணவர்கள் பரீட்சைக்கு நிறுத்தப்பட்டு 6 பேர் இரண்டாம் பிரிவிலும் 5 பேர் மூன்றும் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர். 7 பேர் நூன சித்தியடைந்துள்ளர். ஒருவர் மட்டும் சித்தியடைய

வில்லை. இரண்டாவது பயிற்சி வகுப்பு ஆடிமாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை நடாத்தப்பட்டது. இப் பயிற்சி முடிவில் 31 மாணவர்கள் பரீட்சைக்கு நிறுத் தப்பட்டனர். இவர்களின் பரீட்சை முடிவு இன்னும் வெளியாகவில்லை. மேற்படி இருபயிற்சி வகுப்புக்களை யும் திறம்பட நடாத்தி முடிப்பதற்கு எமக்குப் பெரி தும் உதவியாக இருந்த கூட்டுறவுப் பரிசோதகர்களான திரு. கே. இராசையா அவர்களுக்கும், திரு. கே. சண் முகநாதன் அவர்களுக்கும் எமது சபை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## வாகன விடுதி கட்டுதலும், கட்டிடத் திருத்த வேலையும்

மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சமாசத்திடமிருந்து அதன் கட்டிடத்தை நாம் பொறுப்பேற்ற பொழுது வாகன விடுதிகள் கட்டப்படாமலும், பல திருத்த வேலைகள் செய்யப்படாமலும் இருந்தன. இவ்வேலைகள் யாவும் தற்பொழுது சிறிலங்கா தேசிய கூட்டுறவுச் சபையினால் ரூபா 17,927/65 சதம் செலவில் செய்யப் பட்டு வருகின்றன. வாகன விடுதி கட்டுவதற்கும், திருத்தவேலைகள் செய்வதற்கும் எமது சபை சிறிலங்கா தேசியக் கூட்டுறவுச் சபைக்கு நன்றி தெரிவிக்கின்றது.

எமது அங்கத்துவ சங்கங்களின் நலன்கருதி அய ராது உழைத்து வருகின்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் திரு. ஆர். வி. இராசகுரு அவர்களுக்கும், மன் னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. கே. குணரத்தினம் அவர்களுக்கும் அவரின் உதவியாளர் களுக்கும், தேசியக் கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. ஜி. எஸ். தயானந்தா அவர்களுக்கும், தேசியக் கூட்டுற வுச் சபைப் பொதுக் காரியதரிசி திரு. பி. வி. கினிகமா அவர்களுக்கும் எமது சபை நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
கூட்டுறவுச் சேவையிலுள்ள
இ. சுப்பிரமணியம்
காரியதரிசி

# இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைக் கூட்டுறவுமூலம் எவ்வாறு தீர்க்கலாம்

**ஞானலஜனி சிவஞானம்**
(மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை)

ஒவ்வொரு மனிதனும் தனது சூழ்நிலைக்கேற்பப் பிறந்தாலும் அதனைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவோ, திருத்தியமைக்கவோ திறனைப் பெற்றவனாக விளங்குகின்றான்; தனது உயர்வு குறிக்கோளாக உலகியலையும் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டியவனாக இருக்கின்றான். இன்றேல் சூழ்நிலையே அவனை அழிக்கும் ஆற்றலைப் பெற்றுவிடும்.

பெருகிவரும் மக்கள் தொகை இன்று ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. உணவு, உடை, உறையுள் இம்மூன்றும் மனிதனின் அத்தியாவசிய தேவைகளாகும். மனித இனம் பெருகும்போது இத்தேவைகளும் கணிசமான அளவு பூர்த்தியடையத்தக்கதாக விருத்தியுறல் வேண்டும். இன்றேல் மனிதன் தன்னை உயர்நிலைக்கு உயர்த்த முடியாது.

கூட்டுறவு இயக்கம் பொருளாதாரத்துறையில் தோன்றிய தனி இயக்கமாகும். ஒரு நாட்டின் உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்கி அவைகளைக் குறிப்பிட்ட ஒரு சிலரின் நலனுக்காக அல்லாமல் எல்லோருடைய பொது நன்மைக்காகப் பயன்படுத்துவதுதான் அதன் முக்கிய நோககமாகும். கூட்டுறவு முறை இங்கிலாந்தில் பிரித்துக் கொள்ளும் துறையிலும், ஜெர்மனியில் மிகுத்து வைக்கும் துறையிலும் ரஷ்யாவில் எல்லாத்துறையிலும் வளர்ந்து வந்தது.

உலக மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் வசதியின்மைகளிலிருந்து இலங்கையை ஐக்கிய இயக்கமே காப்பாற்றியதென்றால் அது மிகையாகாது

இவ்வியக்கத்தின் சிறப்பை உணர்ந்த பொது மக்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றனர். அவர்கள் தமது விளை பொருள்களை விற்று அதிக பயனடைந்ததுடன் வருடாவருடம் சங்கங்கள் பெறும் இலாபத்திலும் ஒரு பங்கைப் பெற்றனர். தமது ஒத்துழைப்பால் சங்கம் பெற்ற இலாபப்பணத்திலிருந்தே சங்கங்களுக்குக் காணியும் கட்டிட வசதிகளும் பெற்றனர்.

இவ்வியக்கம் ஏழை மக்களுக்கு வங்கியாகவும், உற்பத்தித்தாபனமாகவும், விற்பனை நிலையமாகவும், கொள்வனவுச் சந்தையாகவும் நாட்டில், கிராமங்களில் ஒற்றுமையை வளர்க்கும் சின்னமாகவும் விளங்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் 1957 ம் ஆண்டுக்கு முன் பல பிரிவுகளாக இயங்கி வந்தன. இதனுல் விவசாயி குறிப்பிட்ட பொருளைக் கொள்வனவு செய்யவோ, விற்பனை செய்யவோ பல சங்கங்களுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது. இந்த நிலையை மாற்றி 1957 ம் ஆண்டில் பலசங்கங்களை ஒன்றிணைத்து பல நோக்குச் சங்கமாக அமைக்கப்பட்டது. இதனுல் விவசாயி அதிக பயனடைந்தானென்றே கூறலாம்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விற்பனைக் கடையை நடாத்தியது. விளைபொருட்களை மக்களிடமிருந்து நியாய விலைக்கும் பெற்றுக்கொண்டது. அவர்களின் விவசாய விருத்திக்குப் பலவித கடனுதவி செய்தது. இச்சங்கம் பதினன்கு வருடகாலமாக இயங்கி வந்தும் பல்வேறு பிரச்சினைகளால் நஷ்டத்திலும் மக்களின் சேவையை உணர்ந்து செயலாற்ற முடியாமலும் இருந்தன. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நிருவகித்து வந்தவர்களும் போதிய கவனம் செலுத்தாமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைக் கண்ணுற்ற இன்றைய மக்கள் முன்னணி அரசாங்கம் நல்ல தீர்வுகாண முன் வந்தது. மக்கள் தமது தேவைகளைத் தடையின்றிப் பெற வழி வகைகள் செய்வதற்காகவே அரசாங்கம் புனரமைப்பை மேற்கொண்டது. கூட்டுறவு இயக்கம் 1971 ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்படும்போது 5818 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாடு முழுவதி

லும் செயற்பட்டன. இவை இன்று 372 ஆரம்ப பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

எமது முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் எதிர்வரும் ஆண்டுகளில் உயர்வதற்கு அறிகுறிகள் தென்படவில்லை. எனவே, எமக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணய மாற்றைச் சேமிக்க வேண்டும்.

சின்னவெங்காயம், பாசிப் பயறு, மிளகாய் என்பவற்றை நமது நாட்டில் செய்கை பண்ண வசதியிருக்கின்றது. ஆனால் அரசாங்கம் இதுவரை இவைகளின் அபிவிருத்தி பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. இப்பொழுது சின்னவெங்காயம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் நமது விவசாயிகள் பெருமளவில் வெங்காயத்தை விருத்தியாக்க ஊக்கமுடன் முன் வந்துள்ளனர்.

உருளைக் கிழங்குச் செய்கையில் ஊக்கம் காட்டாமலிருந்த விவசாயிகள் சமீபகாலமாக உருளைக் கிழங்குச் செய்கையில் கவனம் செலுத்தி முழு இலங்கைக்கும் இன்று உருளைக் கிழங்கின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். இதனால் ஆண்டுதோறும் மூன்று கோடி ரூபா அந்நிய செலாவணி மிச்சமாகின்றது. நமது விவசாயிகளும் அதிக வருமானம் பெற்றுவருகின்றனர். பல நீர்ப்பாசனத் திட்டங்களின் காரணமாகவும், 1977–ல் நெல்லிலும் சுயதேவை பூர்த்தி ஏற்படுமென்று நம்பப்படுகின்றது. நமது நாட்டு மக்கள் முன்வந்தால் இதுவும் சாத்தியமாகும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

—o—

## மன்னூர் மாவட்டக்குழு

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மன்னூர் மாவட்டக்குழுவின் வருடாந்த மாவட்டக் கூட்டத்தில் திருவாளர்கள் O. K. செயினுலாப்தீன், N. S. M. கவுத், S. பத்திநாதன், K. சாள்ஸ் பீரிஸ், டேவிற் சிமியோன் ஆகியோர் மாவட்டக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி 1974

## சிரேஷ்ட தராதரப் பத்திரம்

கூட்டுறவுப் பணியாளர் சிரேஷ்ட தராதரப் பத்திரத்திற்கான பயிற்சி நெறி யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியில் 1-7-74 தொடக்கம் 31-10-74 வரை நடைபெறவிருக்கின்றது.

தகைமைகள்

கூட்டுறவுப் பணியாளர்

1. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அல்லது
2. சிரேஷ்ட பாடசாலை பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய வர்கள அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திர பரீட்சையில் (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியெய்தியவர்கள்.

அல்லது

3. கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தி ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவர்கள்.

பணியாளர்கள் அல்லாதவர்கள்

சிரேஷ்ட பாடசாலைப் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி யெய்தி அத்தடவையில் அல்லது அத்தடவையிலும் வேறு ஏதேனும் தடவையிலும் எண் கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது கணக்கு பதிவியல் அல்லது கணிதம் அல்லது பிரயோக கணிதம் ஆகியவை ஒன்று உட்பட 4 திறமைச் சித்தியுடையவர்கள். விண்ணப்ப முடிவு திகதி: 15-6-74.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

பொறுப்பதிகாரி
கூட்டுறவுக் கல்லூரி,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் தமது முகவரியினை எழுதி முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையினை தபாலில் மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும்.

# தமிழ்நாட்டில் கூட்டுறவியக்க முன்னேற்றம்

உணவு. கூட்டுறவு அமைச்சர்

மன்னை ப. நாராயணசாமி

கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த இருபதாண்டுகளில் வெற்றி நடைபோட்டு நாட்டின் பொருளாதார வளம் காண இன்றியமையாப் பல துறைகளில் ஏற்றமிகு பணியாற்றி வந்துள்ளன. பெருமளவில் கடன் வழங்கல், வேளாண்மை இடுபொருள்களுக்கு ஏற்பாடு செய்தல், பொருள்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் இக்கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் வேளாண்மை உற்பத்தியில் புரட்சியை உருவாக்கியுள்ளன என்பது யாவரும் அறிந்ததே. வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் உழவர்களுக்கு உரிய காலத்தில் போதிய கடன் வசதியளித்து ஈவிரக்கமற்ற வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளன.

## கடன் வழங்கு சங்கங்களின் முன்னேற்றம்

கடன் வழங்கு சங்கங்கள் 1965-66 - ஆம் ஆண்டில் வழங்கிய குறுகியகால நடுத்தரக் கடன் ரூபாய் 30 கோடி ஆகும். 1972-73 ஆம் ஆண்டில் இக்கடன் தொகை இருமடங்குக்கும் அதிகமாகியுள்ளது என்பதிலிருந்து இத்துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற உண்மை புலனாகும். இத்தொகை 1973-74ஆம் ஆண்டில் ரூபாய் 75 கோடியாகவும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் ரூ.105 கோடியாகவும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அதிக உழவர்களுக்கும் கடன் வழங்குவதற்கு ஏற்றாற்போல வேளாண்மைக் கடன் வழங்கு திட்டங்களை விரிவுபடுத்துவதும், அமைப்பு முறையை வலுப்படுத்துவதுமே இவ்வெல்லாத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள் வலிமை பொருந்தியனவாய் இருக்கவேண்டும்; இல்லையெனில் கடன் வழங்கு முறையே நிலைகுலைந்து வேளாண்மைத் தொழிலே சீர்குலைய நேரிடும். இதற்கு வழிகாணும் பொருட்டு, விரயத்தில் இயங்கி வந்த சங்கங்களையும், நொடித்துபோன சங்கங்களையும் தனித்தியங்கக் கூடிய சங்கங்களாகச் சீரமைத்து, ஆண்டொன்றுக்கு

ரூபாய் 2 லட்சம் குறைந்த அளவு கடன் வழங்கும் வகையில் அவற்றை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளின் வாயிலாக 11,000 கடன் வழங்கு சங்கங்கள் 5,017 சங்கங்களாகக் குறைக்கப்பட்டு அவற்றில் 4,686 சங்கங்கள் தனித்தியங்கக்கூடிய அல்லது அதற்கேற்ற திறனுள்ள சங்கங்களாக்கப்பட்டன. இத்திட்டம் முடிவுறும் கால அளவுக்குள் 4,750 சங்கங்கள் தனித்தியங்கும் அல்லது தனித்தியங்கும் திறனுள்ள நிலையிலிருக்கும். தனித்தியங்கக் கூடிய திறன் உள்ள சங்கங்களை அடுத்த ஈராண்டுகளில் தனித்தியங்கும் சங்கங்களாக மாற்றும் திட்டம் ஒன்று 1974–75ல் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி, தனது கிளைகள் பலவற்றையும், 223 தொடக்க நில வள வங்கிகளையும் கொண்டு உழவர்களின் நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்கிறது. கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள், மற்றும் டிரக்டர்கள் வாங்குவதற்கும் நிலத்தைப் பண்படுத்தவும் நேரடியாகக் கடன்கள் வழங்கும் முறை நிறுத்தப் பட்ட பிறகு அவை, தற்போது ஓர் அச்சாணிபோல் செயல்பட்டு வருகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்காண்டுகளில், நிலவள வங்கிகள், மொத்தம் ரூபாய 83 கோடியை நீண்டகாலக் கடன்களாக வழங்கியுள்ளன. 1973-74ஆம் ஆண்டில் ரூபாய் 18 கோடி அளவுக்கு கடன்கள் வழங்கும் திட்டம் உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் ரூபாய்100 கோடிக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. (தொடரும்)

---

## ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் யாழ் விஜயம்

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. G. S. தயானந்தா அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்து ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவு அபிவிருத்தி பற்றி பல விடயங்களைக் கலந்துரையாடினார். மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை, வலி இழக்கு தென்பகுதி ப. நோ. கூ. ச, யாழ் கூட்டுறவுக் கல்லூரி ஆகியவற்றையும் அவர் சென்று பார்வையிட்டுள்ளார்.

வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

**வாடகைக் கட்டணங்கள்**

**நாடகம், நடனம்**

| | | |
|---|---|---|
| இரவு | 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் | ,, ,, | 200-00 |

**இசை நிகழ்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| இரவு | ,, ,, | 175-00 |
| பகல் | ,, ,, | 150-00 |

**ஏனைய நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |

**திருமணம் – பகல் அல்லது இரவு**

| | |
|---|---|
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |

**பிணை**

| | |
|---|---|
| இரவு | 150-00 |
| பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238

கூட்டுறவுத்தொடர்பு ஒரு நல்ல தொடர்பு

வடபகுதி விவசாய
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
அகில இலங்கை
கூட்டுறவு நுகர்ச்சியாளர்
சமாசத்துடன்
இணைந்து தற்பொழுது

**ஸ்ரீலங்கா கூட்டுறவு**
**சந்தைப்படுத்தும் சம்மேளனமாக**

இயங்கி வருகின்றது.
இவ்விணைப்பு
உற்பத்தியாளரையும், நுகர்ச்சியாளரையும்
மேலும் நெருங்கிய தொடர்பு கொள்ள
உதவியளிக்கின்றது.

உங்கள் வருங்காலத்திட்டத்தைக் கூட்டுறவுக்கூடாக அமையுங்கள்.

திறமான சேவை, பாதுகாப்பு, வெற்றிக்கு
ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும்
சம்மேளனத்தை ஆதரியுங்கள்.

**ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம்**

127, கிராண்பாஸ் வீதி,
**கொழும்பு 14.**
தொலைபேசி 25642-24991
தந்தி 'கொன்கம்''

111, பிரதான வீதி,
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி 504
தந்தி "அப்பீஸ்"



Published by the Jaffna District Committee, National Co-operative Council of SriLanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the J. Municipality M.P.C.S. Printing branch, the Co op. Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.)